**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, ஆனி மாதம் 16 ம் நாள்
**இ.ம.எண். 2/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 195/2019**

1. R. அமுதா
2. R. ராஜசேகர் .. மனுதாரர்கள்/ வாதிகள்

//எதிர்//

1. S. ராமமூர்த்தி ..1–ம்எதிர்மனுதாரர்/பிரதிவாதி

2. S. விஜயபாஸ்கரன்
உதவிபொறியாளர் நீர்வளத்துறை
பாசனப்பிரிவு, செம்பனார்கோவில். .. 2–ம் எதிர்மனுதாரர்/
சேர்க்கவேண்டிய தரப்பினர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 30.06.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. ராம்குமார், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. E. செல்வராஜ், அவர்கள் ஆஜராகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது மனுவில் கண்ட விவரம் படி தாவா பிராதை திருத்தம் செய்து கொள்ள அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுதாரர் தரப்பில், இந்த இடைமனுவின் மனுதாரர் என்றும், வழக்கில் 1ம் வாதி என்றும், 2–ம் வாதி தனது மகன் என்றும், அவருக்காகவும் சேர்த்து இந்த அபிடவிட்டை தான் தாக்கல் செய்ததாகவும், மேற்படி வழக்கு விபரம் நன்கு தெரியும் என்றும், தாங்கள் இந்த வழக்கை பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தொடர்ந்து மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், இந்நிலையில் மேற்படி வழக்கில் சேர்க்கவேண்டிய தரப்பினரான 2–ம் எதிர்மனுதாரர்

S. விஜயபாஸ்கரன் இவ்வழக்கின் பிரதிவாதியான S. ராமமூர்த்தியுடன் வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு தாவா சொத்துகளை தாங்கள் அனுபவிப்பதற்கு தொடர்ந்து சட்டத்திற்கு புறம்பாக தனது அதிகாரத்தை பயன்படுத்தி மேற்படி 2-ம் எதிர்மனுதாரர் இடையூறு செய்து வருவதாகவும், எனவே இவ்வழக்கில் மேற்படி 2ம் எதிர்மனுதாரரை சேர்க்க மாண்பமை நீதிமன்றத்தில் மனு (IA No 22/2023) தாக்கல் செய்யப்பட்டு அது மாண்பமை நீதிமன்றத்தில் கடந்த 20-02-2025 அன்று அனுமதிக்கப்பட்டதாகவும், இதனை அனுசரித்து தாவா பிராதில் மேற்படி 2ம் எதிர்மனுதாரரான புதிய தரப்பினரை சேர்க்க தாவா பிராதை திருத்தம் செய்ய வேண்டியது அவசியமும், நியாயமாகவும் உள்ளது என்றும், இல்லையென்றால் தங்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் சம்பவிக்கும் என்றும், எனவே, மனுவில் கண்ட விவரம் படி தாவா பிராதை திருத்தம் செய்து கொள்ள அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிருரையின் சுருக்கம்:**

3. மனுதாரர்கள் /வாதிகள் தாக்கல் செய்துள்ள மனு U/s Order 6 Rule 17 C.P.C__சட்டப்படியும் நியாயப்படியும் சரியல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. இந்த கவுண்டரில் வியாகதமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சங்களை தவிர மற்ற மனுவிலும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டிலும் கூறியுள்ள அனைத்து அம்சங்களும் சரியல்ல. இதனை நிரூபிக்க மனுதாரர்கள் கடமைப்பட்டுள்ளார்கள்.

4. மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் பாரா 2-ல் தாவா வழக்கை மனுதாரர்கள் முதல் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பொய்யான ஆவணங்கள் அடிப்படையில் போர்ஜரியான ஆவணங்கள் அடிப்படையில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்பது உண்மை. அதனை மறுத்து முதல் எதிர்மனுதாரர் எதிர்வழக்குரையும் எதிர் உரையும் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதும் உண்மை. மேற்படி நம்பரில் இந்த முதல் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் உரையும், எதிர் வழக்குரையும் இந்த கவுண்டரின் ஒரு பாகமாக கருதும்படி பிரார்த்திக்கப்படுகிறது.

5. தாவா வழக்கிற்கும் 2ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித சம்பந்தமும் தொடர்பும் இல்லை என்றும், ஏதோ 2ம் எதிர்மனுதாரர், முதல் மனுதாரருடன் வஞ்சக கூட்டு சேர்த்து கொண்டு தாவா சொத்துகளை மனுதாரர்கள் அனுபவிப்பதற்கு தொடர்ந்து சட்டத்திற்கு புறம்பாக அதிகாரத்தை பயன்படுத்தி இடையூறு செய்து வருவதாக கூறுவது சரியல்ல என்றும், மேற்படி நம்பரில் இந்த மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள IA No. 22/2023 in OS 195/2019–ல் இந்த முதல் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள கவுண்டரை இந்த கவுண்டரில் ஒரு பாகமாக கருதும்படி பிரார்த்திக்கப்படுகிறது. மனுதாரர்கள் திருத்த மனுவில் கூறியுள்ள விபரங்கள் சரியல்ல என்றும், பாரா 7 (அ) மற்றும் 7 (ஆ) பாராவாக சேர்க்கப்பட்டுள்ள பாராக்களில் கூறியுள்ள அனைத்து விபரங்களும் சரியல்ல என்றும், அதனை இந்த முதல் எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார் என்றும், அதனை நிரூபிக்க மனுதாரர்கள் கடமைப்பட்டுள்ளார்கள்.

6. மனுதாரர்கள் ஏதோ ஒரு உள்நோக்கத்துடன் தாவா வழக்கில் அரசு அதிகாரியான 2ம் எதிர்மனுதாரரின் சட்டபுறம்பான நடவடிக்கையை தடை செய்ய வேண்டும் என்ற நோக்கில், மேற்படி நம்பரில் 2ம் எதிர்மனுதாரரை சேர்த்துள்ளதாகவும், 2ம் எதிர்மனுதாரரிடம் எவ்வித பரிகாரமும் கோராத நிலையில் 2ம் எதிர்மனுதாரர் தாவா வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்றும், எனவே, மேற்படி மனுவை இந்த 1ம் எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

<u>**தீர்வு:**</u>

8. மனுதாரர் தரப்பில், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், இந்நிலையில் இந்த வழக்கில் சேர்க்கப்பட வேண்டிய தரப்பினரான விஜயபாஸ்கரன் , மேற்படி 2ம் எதிர்மனுதாரரை சேர்க்க மாண்பமை நீதிமன்றத்தில் மனு IA.No. 22/2023 தாக்கல் செய்யப்பட்டு அது மாண்பமை நீதிமன்றத்தில் கடந்த 20.02.2025 அன்று

அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, தாவா பிராதில் மேற்படி 2ம் எதிர்மனுதாரரான புதிய தரப்பினரை சேர்க்க தாவா பிராதை திருத்தம் செய்ய வேண்டியது அவசியமும் நியாயமாகவும் உள்ளது என்றும், இல்லையென்றால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளது.

9. எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்திற்கும், 2ம் எதிர்மனுதாரருக்கும் எவ்வித சம்மந்தமும் தொடர்பும் இல்லை என்றும், மனுதாரர் திருத்த மனுவில் கூறியுள்ள விவரங்கள் சரியல்ல என்றும், 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோராத நிலையில் 2ம் எதிர்மனுதாரர் தேவையில்லாத நபர் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

10. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

11. மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது மனுதாரர் 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து தாவா சொத்தினை இடையூறு செய்து வருவதால் அவரையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனுவானது இ.ம. எண் 22/2023 என கோப்பில் எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 2ம் மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்குரையை திருத்துவது இந்த வழக்கை நடத்துவதற்கு மிக அவசியமான ஒன்று என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**12. முடிவாக இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகையில்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 30.06.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

ஒப்பம் ( P. கனிமொழி)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

இணைப்பு :

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ஒப்பம் ( P. கனிமொழி)

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

தரங்கம்பாடி.